கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.144/2016 DW:1 19.09.2025**

2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **19**ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய ராமச்சந்திரன் என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் | வயது | 65 |
| த/க. பெயர் | சிங்காரம் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | டி.ஏந்தல் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொன்னதின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனது மனைவியின் பெயர் சிவகங்கை. எனது மனைவியின் சகோதரியான ராணி தான் இந்த வழக்கில் 1வது பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் ராணி அவர்களுக்கும் சேர்த்து தான் நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி 17 செண்ட் வேண்டும் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளளார். வாதி எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் 2 அயிட்ட சொத்துகளுக்கு. இந்த 2 அயிட்ட சொத்துகளும் எந்த ஊரில் உள்ளது என்றால் டி.ஏந்தல் கிராமம். வழக்கு 2 அயிட்ட சொத்துக்களின் நான்கெல்லைகளிலும் எனக்கு ஏதாவது சொத்துரிமை உள்ளதா என்றால் எனக்கு இல்லை ஆனால் எனது மாமனாருக்கு உள்ளது. வழக்கு சொத்தின் நான்கெல்லைகளில் உள்ள சொத்துக்களில் நான் ஏதாவது குத்தகையில் பயிர் செய்து வருகிறேனா என்றால் இல்லை.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2025.09.19 14:50:35 +0530

Additional District Munsif,
Tittagudi.